

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.6.2024) தலைமைச் செயலகத்தில், சிவகங்கை மாவட்டம், சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோயில் திருவிழாவை முன்னிட்டு 18 ஆண்டுகளுக்குப் பிறகு 21.6.2024 அன்று தேரோட்டம் சிறப்பாக நடைபெற்றதையொட்டி ஊஞ்சனை நாட்டைச் சேர்ந்த இராமசாமி, அருணாசலம், கண்டதேவி ஊராட்சியைச் சேர்ந்த அ. முருகன், மு. ராஜ்குமார், கே.ஆர். கேசவமணி, செம்பொன்மாரியைச் சேர்ந்த கரு. ராமசாமி, முரசொலி, தென்னிலை நாடு – எழுவன்கோட்டையைச் சேர்ந்த செந்தில்நாதன், முடியரசன், வீரகுமார், கண்ணங்கோட்டைச் சேர்ந்த கணேஷ்குமார், இரவுசேரி நாட்டைச் சேர்ந்த பாலமுருகன், ரகுநாதன், கார்த்திகேயன், கதிர். செந்தூர், கோயில் குருக்கள் தாஸ் ஆகியோர் சந்தித்து நன்றி தெரிவித்தனர். உடன் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் உள்ளார்.

### தேவையான இடங்களில் – 2 ஆண்டுகளில்

# தடுப்பணைகள் கட்ட விரைந்து நடவடிக்கை!

## பேரவையில் அமைச்சர் துரைமுருகன் உறுதி!

**சென்னை, ஜூன் 25-**

**தமிழக சட்டப்பேரவையில் பல்வேறு உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், அடுத்த இரண்டு ஆண்டுகளில் தேவையான இடங்களில் தடுப்பணைகள் கட்ட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்.**

நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டதாவது:–

ஆத்தூர் பெத்தநாயக்கன்பாளையம் வடக்கு ஒன்றியம், வில்வனூரில் உள்ள வசிஷ்ட நதியின் குறுக்கே தடுப்பணை அமைப்பதற்கு முதல் நிலை ஆய்வு செய்ததில், இத்திட்டத் தளம் தடுப்பணை அமைக்க ஏதுவாக உள்ளது. இது நிலத்தடி நீர் உறிஞ்சுதல் வகைப்பாட்டில் அதிநுகர்வு பகுதியாகவும் (over exploited) நிலத்தடி நீர் செறிவூட்டு மண்டலத்தில் Highly favourable for recharge மண்டலத்திலும் அமைந்துள்ளதால்,



விரிவான தள ஆய்வு செய்து, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்

இப்படி ஏற்பட்ட உடைப்புகளை சரி செய்வதற்கு நாங்கள் இரண்டு விதமான பணிகளை செய்கிறோம். ஒன்று, தற்காலிகமான பணிகள்; இன்னொன்று நிரந்தரப் பணிகள். ஆனாலும், உறுப்பினருக்காகவே, நிரந்தரப் பணியாக முடித்துத் தருவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தடுப்பணை உடைந்து 5 பேரை அடித்து சென்றுவிட்டது என்றால், அது பெரிய ஆச்சரியமாக இருக்கிறது. ஏனென்றால், தடுப்பணையில் எவ்வளவு தண்ணீர் நிற்கும்; அது எவ்வளவு என்று எனக்குத் தெரியும். ஒரு நபரைக்கூட அடித்துச் செல்லாது. ஆனால், 5 பேரை அடித்துச் சென்றுவிட்டதாகச் சொல்கிறீர்கள். இருந்தாலும், அப்படி சொன்னால்தான், weight ஆக இருக்கும் என்பதற்காக சொல்கிறீர்கள். உங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.

பொதுவாக உறுப்பினர்கள், என்னையும் சேர்த்தே சொல்லுகிறேன். பெரிய கோரிக்கை தங்கள் தொகுதியிலே தடுப்பணைகள் அமைத்து, தண்ணீரை தேக்கி, அதை recharge செய்து விவசாயத்திற்கும், கால்நடைகளுக்கும், ஏன் குடி நீருக்கும்கூட பயன்படுத்துவதற்கு வகை செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருப்பதனால்தான், ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட நிதிநிலை களிலிருந்து கூடுமான வரையில், இந்தத் தடுப்பணைகளைக் கட்டுவதற்கு முயற்சிக்கிறோம். ஆகையினால், முதலமைச்சர் அவர்களிடத்தில் இதுபற்றி நான் பேச இருக்கிறேன். வேறு திட்டங்கள் எழுப்பப்படாவிட்டாலும், குறிப்பாக தமிழ்நாட்டில் இந்த இரண்டு ஆண்டு காலத்திற்குள்ளாக மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிடுகிற தடுப்பணைகளை யாவது கட்டி முடிக்க வேண்டுமென்று நான் முடிவெடுத் திருக்கிறேன். அதற்கான முயற்சி களில் ஈடுபட்டிருக்கிறேன்.

நான் மறுபடியும் சொல்கிறேன். இந்தத் தடுப்பணைகள் கட்டுவதுதான் நம்முடைய எம்எல்.ஏ.களுடைய கோரிக்கைகளிலே முக்கியமாக இருக்கிற காரணத்தால், எந்தெந்த தொகுதியிலே தடுப்பணைகள் கேட்கிறார்கள் என்று பார்த்து, எது சாதகமானது என்பதையும் அரசுக்கு தெரிவித்து, அவற்றை இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் கட்ட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் பேசி நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னேன். ஆக, இவ்வளவு தெளிவாக நான் சொன்ன பிறகும், அங்கு ஒரு தடுப்பணை கட்ட முடியுமா என்று கேட்கிறார்கள். எல்லா கேள்விகளுக்கும் இந்தப் பதிலே போதுமானது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.




